சார்பு நீதிமன்றம், பெருந்துறை

OS No: 236/2022

2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 24 நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அஹமது,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 24.07.2025

Pw1 ( தமிழரசன்)

**குறுக்கு விசாரணை ( பிரதிவாதி தரப்பில்)**

எனக்கு பூர்வீகம் ராமலிங்கபுரம், நான் இருப்பது சென்னிமலையில் குடியிருக்கிறேன். நான் சென்னிமலையில் வாடகை வீட்டில் உள்ளேன், சொந்த வீடும் உள்ளது. நான் சொந்த வீட்டில் கார்மண்ட்ஸ் வைத்துள்ளேன். விவசாயம் உள்ளது. பிரதிவாதி என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்று என்றால் ஞாபகமில்லை. நான் தொழில் செய்து வருவதற்கும் விசாயத்திற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி தெய்வசிகாமணி எனக்கு உறவினரும் அல்ல, நண்பரும் அல்ல என்றால் உறவினர் அல்ல, ஆனால் 20 ஆண்டு கால நட்பு உண்டு. பிரதிவாதிக்கு என்னுடன் சுமார் 10 ஆண்டுகளாக வரவு செலவு உள்ளது. நான் கடன் எதுவும் வாங்கவில்லை. நான் சீட்டு நடத்தும் வழக்கம் இல்லை. தாவா கடனுறுதி சீட்டில் நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததற்கு பின்னிட்டு நான் வேறு கடன் எதுவும் வழங்கவில்லை. வழக்கு கடனுறுதி சீட்டிற்கு முன்பாக 2017 ம் ஆண்டு பிரதிவாதி என்னிடம் ரூ.50,000/-கடன் வாங்கியுள்ளார். அதை கைமாற்றாக தான் வாங்கினார். 2 மாதத்தில் திருப்பி கொடுத்து விட்டார். அதற்கு வட்டி எதுவும் நான் வாங்கவில்லை. நான் கார்மண்ட்ஸ் தொழில் செய்து வருவதற்கு வரவு செலவு கணக்கு உள்ளதா என்றால் இல்லை, அதை நான் லேபர் கான்டிராக்ட் ஆக செய்து வருகிறேன். எனக்கு எச்டிஎப்சி வங்கி, சென்னிமலை,

கனரா வங்கி, முருங்கத்தொழுவு ஆகிய வங்கிகளில் கணக்கு உள்ளது. வங்கி கணக்குப் பட்டியலை என்னால் முன்னிலைபடுத்த முடியும். நான் பிரதிவாதி நீங்கலாக வேறு யாருக்கும் கடன் கொடுக்கவில்லை. நான் விவசாய கடன் வாங்கவில்லை, கல்விக் கடன் கனரா வங்கியில் 2018 ம் ஆண்டு பெற்றுள்ளேன். கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் கடன் பெற்றேன் என்றால் சரி. கல்விக் கடன் இன்றைய தேதி வரை முழுமையாக செலுத்தி முடிக்கப்படவில்லை என்றால் சரிதான். கல்விக் கடன் ரூ.15,00,000/- பெற்றேன். வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டம் மற்றும் இயலாமையினால் தான் கல்விக் கடன் செலுத்த முடியவில்லை என்றால் சரியல்ல. தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பயிர்க் கடன் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் வழங்கிய அறிவிப்பிற்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். பதில் அறிவிப்பில் உள்ள விவரங்களை தெரிந்து கொண்டேன். பதிலறிவிப்பில் கடனுறுதி சீட்டின் நகல், வங்கி கணக்குப் பட்டியல் மற்றும் இதர ஆவணங்களை கோரியிருந்தார் என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். தாவா தாக்கல் செய்யும் முன்பாக கடனுறுதி சீட்டின் நகல் பிரதிவாதிக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. பிரதிவாதி கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் மற்றும் கைரேகை தன்னுடையதல்ல என எதிர்வாதம் செய்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. செந்தாம்பாளையம் கோவிந்தசாமி ஐ எனக்கு உறவினரா என்றால் இல்லை, நான் எலெக்ரிக் கடை சென்னிமலையில் வைத்திருந்தபோது வரவு செலவு செய்வார், அந்த வகையில் தெரியும். அந்த கடையை 2018 ம் ஆண்டு நான் கொடுத்து விட்டேன். வியாபாரம் நஷ்டம் அடைந்ததால் கொடுத்து விட்டேன் என்றால் சரியல்ல. சென்னிமலையை சேர்ந்த வினோத் குமார் எனது நண்பர். பிரதிவாதிக்கு என்ன சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, அவருக்கு சொத்து உள்ளது. நான் அவர் வீட்டிற்கு சென்றதில்லை என்றால் சரியல்ல.

என்னிடம் ஒரு கடனுறுதி சீட்டு தான் இருந்தது, அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். காசோலை எதுவும் இல்லை.ஸ்டாம்ப் பேப்பரில் கடனுறுதி சீட்டு எழுதப்பட்டதா என்றால் கடையில் விற்கப்படும் அச்சடித்த படிவத்தில் தான் எழுதப்பட்டது. கடனுறுதி சீட்டை நான் தான் வாங்கி வந்தேன். 10.12.2019 ல் பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டார். பிரதிவாதிக்கு கடன் கொடுத்த தேதியை எனது நாட்குறிப்பில் குறித்து வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் கடனுறுதி சீட்டிற்கு முதல் நாளும், கடனுறுதி சீட்டிற்கு அடுத்த நாளும் யாருக்கு பணம் கொடுத்தேன் என்றால் யாருக்கும் பணம் கொடுக்கவில்லை. தாவா கடனுறுதி சீட்டிற்கு முன்பாக யாருக்கும் நான் கடனுறுதி சீட்டின் அடிப்படையில் பணம் கொடுக்கவில்லை. பிரதிவாதிக்கு கடன் கொடுப்பதற்க முன்பாக நான் யாரிடம் என்ன வரவு செலவு செய்தேன் என்று என்னால் தற்போது சொல்ல இயலாது. நான் யாரிடமும் பணம் கைமாற்று வாங்கவில்லை. பிரதிவாதி ஸ்டாம்ப் பேப்பரில் ரேகை வைத்தாரா என்றால் வைத்தார். கடனுறுதி சீட்டில் இரண்டு ஸ்டாம்ப் ஒட்டப்பட்டது. கடனுறுதி சீட்டு எழுதுவதற்கு ஒரே பேனா பயன் படுத்தப்பட்டதா பல பேனாக்கள் பயன்படுத்தப்பட்டதா என்றால் ஒரே பேனா தான் பயன்படுத்தப்பட்டது. யாருடைய பேனா என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை. கடனுறுதி சீட்டின் பின்பக்கம் யாரும் கையொப்பம் செய்யவில்லை. ரேகை வைப்பதற்காக 4 இடங்கள் உள்ளது. இன்னார் ரேகை என்று எழுதப்படவில்லை. தமிழ் மாதம் கிழமை எழுதப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. கடனுறுதி சீட்டில் அடித்தல் திருத்தல் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு பணம் கொடுப்பதற்கு வசதியில்லை என்றும், பிரதிவாதி யார் என்றே எனக்கு தெரியாது என்றும், கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் மற்றும் கைரேகை பிரதிவாதியுடையதல்ல என்றால் சரியல்ல. கோவிந்தசாமி, வினோத் குமார் மற்றும் நான் கூட்டு சதி செய்து பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டி கடனுறுதி சீட்டை தயார்

செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தீர்ப்பிற்கு முன் ஜப்தி செய்ய மனு தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்ததாக ஞாபகம் உள்ளது. நான் பிரதிவாதியின் சொத்து விவரங்களை வாங்கி வரவில்லை. நான் போலி ஆவணம் தயாரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.07.24 16:30:07 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS